நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு மே மாதம் 12ம் நாள் செவ்வாய்கிழமை

சுருக்கு முறை வழக்கு எண்.2549/2025

**CNR No.TNMD14 – 004741 - 2025**

*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
கள்ளிக்குடி காவல் நிலையம்,
மதுரை மாவட்டம்.
குற்ற எண்.178/2025 … குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

இராமகிருஷ்ணன் (வயது 59/2025),
த/பெ.சுப்பாரெட்டி,
மேலப்பட்டி, கள்ளிக்குடி தாலுகா,
மதுரை மாவட்டம். … குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **சுருக்குமுறை வழக்கு எண்.2549/2025** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | கள்ளிக்குடி காவல் நிலைய குற்ற எண்.178/2025 | |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | | |
| 3. | எதிரியின் பெயர் | : | இராமகிருஷ்ணன் |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | த/பெ.சுப்பாரெட்டி |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரியின் முகவரி | : | மேலப்பட்டி, கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 59/2025 |
| **தேதி விபரங்கள்** | | | |
| 8. | சம்பவம் | : | 20.09.2025 |
| 9. | புகார் | : | 21.09.2025 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கைது தேதி | : | 24.09.2025 |
| 11. | பிணை விடுப்பு | : | Station Bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 29.04.2026 |
| 14 | விசாரணை முடிவு | : | 11.05.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 22.10.2025 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 26.03.2026 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 Cr.P.C. – Allowed<br>U/s.359 BNSS. – Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | see table below |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 11.05.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | காலதாமதத்திற்கான காரணம்: இல்லை | | |

| PW's | Chief | Cross |
|---|---|---|
| 1. | 29.04.2026 | 29.04.2026 |
| 2. | 29.04.2026 | -- |
| 3. | 08.05.2026 | 08.05.2026 |

இவ்வழக்கானது கடந்த 09.12.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.K.R.கேசவன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 11.05.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

கடந்த 20.09.2025ம் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் மேலப்பட்டி கிராமம் சாவடி அருகே வாதி வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த எதிரியிடம் கடனாக பெற்ற பணத்தை கேட்டதாகவும், எதிரி வாதியிடம் உன் பணத்தை வரும் திங்கள் கிழமை தருகிறேன் என்றும், நாயை போல் எடுத்து செல் என்று கேவலமாக பேசியதாகவும், வாதியை பார்த்து தேவிடியா மகன் பொட்டை பையன் என திட்டி அருகில் இருந்த செங்கலை எடுத்து மார்பில் எறிந்து வாதியை கீழே தள்ளிவிட்டு அவர் மேல் அமர்ந்து வாதியின் சட்டையை கிழித்து நகங்களால் கீறி மார்பில் காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரி வாதியின் தங்கையின் பெயருக்கு தானமாக கொடுத்த நிலத்தின் பத்திரத்தை தந்தால் தான் பணம் தர முடியும் என்றும், உடனடியாக உன் டிராக்டரை எடுத்துவிடு இல்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என வாதியை மிரட்டியதாகவும், அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிவிடவும் வாதி அங்கிருந்து அவர் வீட்டிற்கு சென்றதாகவும், அதன் பின்பு எதிரி வாதியின் வீட்டிற்குள் புகுந்து கட்டையை எடுத்து வாதியை தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 329(4), 115(2) BNSன் படி குற்றம் புரிந்துள்ளதாக கள்ளிக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSSன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கின் எதிரிக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு அவர் மீதான 296(பி), 329(4), 115(2) BNSன் கீழான குற்றச்சாட்டுகள் பற்றி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று மறுத்து கூறினார்.

04. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

05. கடந்த 20.09.2025ம் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் மேலப்பட்டி கிராமம் சாவடி அருகே வாதி வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த எதிரியிடம் கடனாக பெற்ற பணத்தை கேட்டதாகவும், எதிரி வாதியிடம் உன் பணத்தை வரும் திங்கள் கிழமை தருகிறேன் என்றும், நாயை போல் எடுத்து செல் என்று கேவலமாக பேசியதாகவும், வாதியை பார்த்து தேவிடியா மகன் பொட்டை பையன் என திட்டி அருகில் இருந்த செங்கலை எடுத்து மார்பில் எறிந்து வாதியை கீழே தள்ளிவிட்டு அவர் மேல் அமர்ந்து வாதியின் சட்டையை கிழித்து நகங்களால் கீறி மார்பில் காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரி வாதியின் தங்கையின் பெயருக்கு தானமாக கொடுத்த நிலத்தின் பத்திரத்தை தந்தால் தான் பணம் தர முடியும் என்றும், உடனடியாக உன் டிராக்டரை எடுத்துவிடு இல்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என வாதியை மிரட்டியதாகவும், அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிவிடவும்

வாதி அங்கிருந்து அவர் வீட்டிற்கு சென்றதாகவும், அதன் பின்பு எதிரி வாதியின் வீட்டிற்குள் புகுந்து கட்டையை எடுத்து வாதியை தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக உள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

06. இவ்வழக்கின் வாதி சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் மற்றும் புகார் கொடுத்த விபரம் பற்றியும் குருவாரெட்டி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டை விலக்கி விட்ட விபரம் பற்றி அழகர்சாமி என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட கள்ளிக்குடி சார்பு ஆய்வாளர் திரு.முத்துராஜா என்பவரை தனக்கு நன்கு தெரியும் என்றும் அவரது கையெழுத்து நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக கள்ளிக்குடி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பவுன்ராஜ் என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் அ.சா.1ன் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எதிரியை சட்டப்பிரிவு 351(1)(ஆ) BNSSன் கீழ் வினவுதல்:–**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியிடம் சட்டப்பிரிவு 351(1)(ஆ) BNSSன் கீழ் வினவியபோது அவற்றை எதிரி பொய் சாட்சியம் என்று கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:—</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரி மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.கேசவன் அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும், எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப் படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சனை:—</u>**

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(பி), 329(4), 115(2) BNSன் படியான குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>சாட்சிகளின் மதிப்பீட்டல்:—</u>**

11. இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவரான அ.சா.1 இந்நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தின் பொழுது கடந்த 20.09.2025 அன்று பகல் 1.00 மணியளவில் பாண்டி கடையில் கூட்டமாக இருந்தது என்றும், அதில் யாரோ ஒரு நபர் தன்னை தகாத வார்த்தைகளால் பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது தான் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் சம்பவ சாட்சியான அ.சா.2 இந்நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தின் பொழுது தனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவரான அ.சா.1 மற்றும் இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக கள்ளிக்குடி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பவுன்ராஜ் என்பவரை அ.சா.3 ஆக விசாரித்து அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

14. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் 2 சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரி அ.சா.1ஐ பொது இடத்தில் பொது மக்களுக்கு மத்தியில் வைத்து அசிங்கமாக திட்டியதாகவோ, அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, அடித்ததாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.3 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில்

சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

15. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரியை சட்டப்பிரிவுகள் 296(பி), 329(4), 115(2) BNSன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை சட்டப்பிரிவு 278(1) BNSSன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16. சொத்துக்கள் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மே மாதம் 12ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>பின்னிணைப்பு:–</u>**

**<u>1. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் மாதிரி அட்டவணை:–</u>**

| அரசு தரப்பு சாட்சி எண். | அரசு தரப்பு சாட்சியின் பெயர். | அரசு தரப்பு சாட்சியின் பங்கு |
|---|---|---|
| 1. | திரு.குருவாரெட்டி | புகார்தாரர் |
| 2. | திரு.அழகர்சாமி | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திரு.பவுன்ராஜ் | விசாரணை அதிகாரி |

**<u>2. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் மாதிரி அட்டவணை:-</u>**

| ஆவண எண். | ஆவணத்தின் பெயர். | ஆவணத்தை நிரூபித்த/ சான்றளித்த சாட்சி |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| 3. | பார்வை மகசர் | அ.சா.3 |
| 4. | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| 5. | அ.சா.1ன் காயச்சான்று | அ.சா.3 |

**<u>3. அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>**:- இல்லை

**<u>4. எதிரி தரப்பில் சாட்சிகள்:-</u>** இல்லை

**<u>5. எதிரி தரப்பில் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:-** 1) விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:-** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.05.12 17:19:27 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.